**UNIVERSITY OF PERADENIYA**

**CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION**

**ශාස්ත්‍රවේදී උපාධි (බාහිර - නව නිර්දේශය - පරීක්ෂණය 200 මට්ටම - 2024**
**இளங்கலை பட்டம் (வெளிவாரி-புதிய பாடத்திட்டம்) பரீட்சை 200 வது தேர்ச்சி மட்டம் – 2024**
**Bachelor of Arts (External - New Syllabus) Examination 200 level - 2024**

# SUPE 204 – Basic Concepts of Social Psychology

# SUPE 204 – சமூக உளவியலின் அடிப்படை எண்ணக்கருக்கள்

කාලය පැය **(03)** තුනයි
காலம்: மூன்று **(03)** மணித்தியாலங்கள்
Time Three **(03)** Hours.

නොපැහැදිලි අත් අකුරුවලට ලකුණු කපනු ලැබේ
எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்
Marks will be deducted for illegible handwriting.

ප්‍රශ්න **04**ට පිළිතුරු සපයන්න
**04** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.
Answer **04** questions only.

මෙම ප්‍රශ්න පත්‍රයේ අඩංගු ප්‍රශ්න සංඛ්‍යාව 08 කි
இந்த வினாப்பத்திரத்தில் 08 வினாக்கள் உள்ளன.
There are 08 questions in the question paper.

---

1. இலங்கையிலுள்ள உயர்கல்வி நிறுவனங்களின் மாணவர்களுக்கு சமூக உளவியலாளர்களின் சேவை அத்தியாவசியமானது என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? உதாரணங்களுடன் விளக்குக.

2. 'காதல்' என்ற எண்ணக்கருவை வரையறை செய்து, ஒரு சமூகத்தில் இளம் பெண்கள் மற்றும் ஆண்களிடையே காதல் விவகாரங்களுக்கு (Love Affairs) வழிவகுக்கும் காரணிகளை சமூக உளவியல் கண்ணோட்டத்தில் உதாரணங்களுடன் கலந்துரையாடுக.

3. இணக்கத்தன்மை (Conformity) பற்றி நீங்கள் கருதுவது என்ன? ஒரு குடும்பத்தில் பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் கருத்துக்களுக்கு இணங்கி செல்வதை பாதிக்கும் சமூக உளவியல் காரணிகளை விளக்குக.

4. உற்பத்தி நிறுவனங்கள் தங்கள் பொருட்களை விற்க பயன்படுத்தும் சமூக உளவியல் உத்திகள் எவை? உதாரணங்களுடன் கலந்துரையாடுக.

5. இலங்கையிலுள்ள பாடசாலை ஒன்றில் 5ஆம் வகுப்பில் பயிலும் மாணவர்களின் வலியத்தாக்கல்/ஆவேச (Aggressive) நடத்தைக்கான காரணங்களை விளக்கி, இந்த நிலையைக் குறைக்க சில ஆலோசனைகளை வழங்குக.

6. உங்களுக்குத் தெரிந்த தெற்காசிய நாடுகளில் இருந்து உதாரணங்களை உசாவி 'பெண்களுக்கு எதிரான பாகுபாடு' (Discrimination against Women) என்ற தலைப்பில் சமூக உளவியல் கட்டுரையொன்றை எழுதுக.

7. இலங்கையில் உள்ள இளைஞர்களுக்கு உளவளத்துணை (Counselling) தேவை என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? உங்கள் பதிலுக்கான காரணங்களைக் கூறுக.

8. பின்வரும் ஜோடி எண்ணக்கருக்களில் ஏதேனும் இரண்டிற்கு (02) குறிப்பெழுதுக.
   I. தழுவல் இணக்கத்தன்மை மற்றும் குருட்டு இணக்கத்தன்மை (Adaptive Conformity and Blind Conformity)
   II. வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை (Guidance and Advice)
   III. அருகாமை மற்றும் தொலைவு (Proximity and Distance)

ஒவ்வொரு விடைக்கும் 25 புள்ளிகள் (Each answer carries 25 marks)

*****